இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.
எம்.சி.ஓ.பி.எண்.93/2021 மசா.1

பெயர். திரு. சிங்காரவேல் த/பெ.

கிராமம். தொழில்.

நாள். 29.10.2024. வயது.

2024 –ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29–ந் தேதி Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி திருமதி. C. கார்த்திகா, எம்.ஏ., பி.எல்., தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சம்மன் சார்வானதன் பேரில் சாட்சியம்அளிக்க ஆஜராகியிருக்கிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு கொடுக்கபட்ட அதிகார கடிதம் சா.சா.1 ஆகும். டிஎன் 51 ஏஏ 0538 டாடா ஏசி வாகனம் விபத்தில் ஈடுப்பட்டது என்றால் சரிதான். அந்த ஓட்டுனருக்கு விபத்து தேதியில் தகுதியான ஓட்டுனர் உரிமம் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அந்த தேதியில் விபத்திற்குள்ளான வாகனத்திற்கு சோழமண்டலம் இன்சூரன்ஸ் கம்பெனி நாகப்பட்டினத்தில் காப்பீடு அமுலில் இருந்தது என்றால் சரிதான். மேற்சொன்ன டாடா ஏசியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சா.சா.2 ஆகும். இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சா.சா.3 ஆகும்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**.

கீழையூர் காவல் நிலையத்தில் இருந்து மோட்டார் வாகன ஆய்விற்கு வேண்டுகோள் கடிதம் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. 30.09.2019ம் தேதி மோட்டார் வாகனம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் கண்டுள்ளபடி டாடா ஏசி வாகனத்தின் தகுதி சான்று விபத்து தேதியில் அமலில் இல்லை என்றால் சரிதான். தகுதி சான்று இல்லாமல் வாகனம் ஓட்டுவது மோட்டார் வாகன சட்டப்படி குற்றம் என்றால் சரிதான்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**